உ

சிவமயம்

உண்மைநெறி விளக்கம்



சைவ சித்தாந்த சபை

சங்கரன்கோவில்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 63

உண்மைநெறி விளக்கம்

திருநெல்வேலி பேட்டை

சித்தாந்த பண்டித பூஷணம்

சிவஸ்ரீ **ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை** அவர்கள்

செய்த பதவுரை, கருத்துரை, விளக்கவுரையுடன்

சைவ சித்தாந்த சபையின்
54-வது ஆண்டு விழா வெளியீடு

நன்கொடையாளர் :

சிவஸ்ரீ T. சங்கரபாண்டிய முதலியார்

துணைத்தலைவர், சைவ சித்தாந்த சபை,

சங்கரன்கோவில்.

வெளியிட்டோர் :

சைவ சித்தாந்த சபை

246, வடக்கு ரதவீதி, சங்கரன்கோவில்.

போன் : 04636 - 224552

9.3.2007

உ

சிவமயம்

மறு பதிப்புரை

சைவ சமயிகளுக்குப் பிரமாணமான நூல்கள் ஆவன - நான்கு வேதம், 28 சிவாகமங்கள், 14 சித்தாந்த சாத்திரங்கள், 12 திருமுறைகள். இதில் முதல் இரண்டும் வடமொழியில் உள்ளன. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் சைவர்களுக்கு இலக்கணம் போல்வது. திருமுறைகள் பன்னிரண்டும் இலக்கியம் போல்வது. பதினான்கு சித்தாந்த சாத்திரங்களில் "சித்தாந்த அட்டகம்" என்று கூறப்படும் எட்டு சாத்திரங்களுக்கு ஆசிரியர் தில்லைவாழ் அந்தணர் ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார். அதில் ஒன்று இந்நூலாகிய "உண்மை நெறிவிளக்கம்" பக்குவான்மாக்கள் (பரமுத்திப் படிநிலை பற்றி) நன்கு தெளிவுறும் பொருட்டு இந்நூலில் தசகாரியம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலுக்குப் பலவுரைகள் இருப்பினும் சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபை நிறுவனர் திருநெல்வேலி பேட்டை சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள பதவுரை, கருத்துரை, விளக்கவுரை சிறப்பாக உள்ளது. சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய நூல்களைப் பாடம் கேட்கும் அன்பர்களுக்கு 9, 10, 11, 12 சூத்திரங்கள் எளிமையாகப் புரிந்துகொள்ள இவ்வுரை மிகவும் உதவியாக உள்ளது என்பதால் இந்நூலை திருநெல்வேலி சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகத்தார் 1961-ல் வெளியீடு செய்தனர்.

தற்போது இந்நூல் கிடைப்பது அரிதாகிவிட்டதால் இதனை மீள் பதிப்புச் செய்யவேண்டும் என நமது சபை துணைத்தலைவர் சிவஸ்ரீ. T. சங்கரபாண்டிய முதலியார் அவர்கள் விரும்பியதுடன் பொருளுதவியும் செய்துள்ளார்கள். அவர்களுக்கு சபை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சைவமக்கள் இந்நூலைக் கற்றுப் பயனடைய வேண்டுகிறோம். திருநெல்வேலி சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகத்தாருக்கும் நமது நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

சங்கரன்கோவில்,
9.3.2007.

சைவ சித்தாந்த சபையார்
சங்கரன்கோவில்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருமடாலய "இளைய சந்நிதானம்",
"வேத சிவாகம சிரோமணி"
ஸ்ரீ-ல-ஸ்ரீ. ராஜ. சரவணமாணிக்கவாசக சுவாமிகள்
கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம்

பல்லகவுண்டம்பாளையம் (Po). விஜயமங்கலம் - 638 056.
போன் : 04294 - 242056 செல் : 94431 - 42056

தேதி 18.02.2007

நமது திருமடத்தின் நல்லாசிக்குரிய சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபை தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட அன்பர் பெருமக்களுக்கு சந்நிதானத்திலிருந்து எழுதிக் கொண்ட ஆசீர்வாதம் நலம்,

சபையின் 54-வது ஆண்டுவிழாவில் உயர்சாத்திரமான, உண்மைநெறி விளக்கம் உரையுடன் வெளியிடுவது அறிந்து மிக மகிழ்ந்தோம். கருணைக்கு உறைவிடமான, ஞானப் பரம் பொருள் ஆன்மாக்கள் மீது உள்ள கருணையினால், பிறந்த பயன் எய்த சாத்திரம், தோத்திரம் ஆகிய இரு கண்களாகத் திகழும் நூல்களை அருளாளர்கள் வாயிலாக நமக்கு அருளச் செய்தான். அச்சாத்திர நூல்களில் சிறப்பாக விளங்கும் உண்மைநெறி விளக்கம், அதன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் அவர்கள், சமயக் குரவர்கள் துதியில்

மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கும்போது திருத்தாள் போற்றி என்று குறிப்பிடுவார்கள். அது போன்றே சந்தானக் குரவர்கள் துதியிலும், அதேபோன்றே உமாபதி சிவாச்சார்யார்க்கும் திருத்தாள் போற்றி என வணங்குவது அவருடைய சிறப்பைக் குறிப்பிடுவதாகும். அதுபோன்றே சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையின் ஸ்தாபகர், சித்தாந்த பண்டித பூஷணம், சிவத்திரு. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்களின் அருமையான உரையோடு வெளியிடுவது மற்றொரு சிறப்பு அம்சமாகும். இதுபோன்ற அரிய நூல்களையும், அரிய செயல்களையும் செய்யும் சபை அன்பர்களை மனதார பாராட்டுகிறோம். இதுபோன்று பல பயனுள்ள நூல்களை வெளியிட்டு பலரும் பயன்பெறும் வண்ணம் செய்யுமாறும் சபை அன்பர்களும், சார்ந்த அன்பர்களும் சிவப்பணியில் ஈடுபட்டு நீடு இனிது வாழ வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

நிறைந்த ஆசிகள்

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

உண்மைநெறி விளக்கம்.

தத்துவரூபம் - தரிசனம் - சுத்தி

1. மண்முதற் சிவம தீறாய்
வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவம தீறாய்
மலஞ்சட மென்றல் காட்சி
மண்முதற் சிவம தீறாய்
வகையதிற் றானிலாது
கண்ணுத லருளா னீங்கல்
சுத்தியாய்க் கருத லாமே.

பதவுரை

கண்ணுதல் அருளால்	-	சற்குரவனது உபதேச மொழிகண்டு
மண்முதல்	-	பிருதிவி தத்துவ முதலாக
சிவமது ஈறு ஆய்	-	நாத தத்துவம் வரையும் உள்ள பிரபஞ்சத்தின்
வடிவு	-	தொழிற் பாட்டை
காண்பதுவே	-	தெரிதலே
ரூபம்	-	தத்துவரூபம் (எனப்படும்).
மண்முதல்	-	பிருதிவி தத்துவ முதலாக

சிவமது ஈறு ஆய்	-	நாத தத்துவம் வரையும் உள்ள பிரபஞ்சம்
மலம் சடம் என்றல்	-	மாயாகாரியமென்றும் உணர்வில்லாததென்றும் அறிதல்
காட்சி	-	தத்துவதரிசனம் (எனப்படும்).
மண்முதல்	-	பிருதிவி தத்துவ முதலாக
சிவமது ஈறு ஆய்	-	நாத தத்துவம் வரையும் (உள்ள)
வகையதில்	-	தத்துவங்களில்
தான்	-	ஆன்மா
நிலாது	-	பொருந்தாமல்
நீங்கல்	-	விலகுதல்
சுத்தியாய்	-	தத்துவசுத்தி யென்று
கருதல் ஆம்	-	சொல்லப்படும்.

கருத்துரை

ஆன்மா தத்துவப் பிரபஞ்சங்களின் தொழிற் பாட்டையறிவது தத்துவரூபம்.

ஆன்மா தத்துவப்பிரபஞ்சங்களுக்கு உணர்வில்லை யென்றறிவது தத்துவதரிசனம்.

ஆன்மா தத்துவப்பிரபஞ்சங்களின் வாயிலாய் முதல்வனை யறிய முடியாதென்றுகண்டு அவற்றை விட்டு விலகுதல் தத்துவசுத்தி.

விளக்கவுரை

I. தத்துவங்கள் மாயையின் காரியம். அவை முப்பத்தாறு. உயிர் அவற்றோடு கூடுகிறது; அதனால் தன் அறிவு இச்சை செயல்கள் விளங்கப்பெறுகிறது. அவ்வறிவிச்சை செயல்களுக்கு விஷயமாவது பிரபஞ்சம். அங்ஙனம் உயிருக்குப் பிரபஞ்சத்தைப் புலப்படுத்துவது தத்துவங்களின் தொழில். அத்தொழில்களின் வகை விரிகளைச் சிவஞான பாடியத்திற் காண்க. அத்தொழிலையும் அவை தாமாகச் செய்வதில்லை. அவற்றைத் தொழிற் படுத்துபவன் முதல்வன். குருபரன் உபதேசத்தால் அவ்வுண்மையை யறிவது **தத்துவரூபம்**.

II. புறக்கருவி, அகப்புறக்கருவி, அகக்கருவி யென அத்தத்துவங்கள் பிரிக்கப்படும். புறக்கருவிகளுட் கண் பார்க்கிறது. காது கேட்கிறது. மூக்கு மோக்கிறது. நாக்குச் சுவைக்கிறது. தோல் உறுகிறது. அகப்புறக் கருவிகளுட் சித்தம் சிந்திக்கிறது. மனம் சங்கற்பிக்கிறது, விகற்பிக்கிறது. அகங்காரம் ஒருப்பட்டெழுகிறது. புத்தி நிச்சயிக்கிறது; நிச்சயிக்கப்பட்ட பொருளின் வடிவாய்ப் பரிணமிக்கிறது. அகக்கருவிகளாகிய கலாதிகள் அப்பரிணாமங்களின் சுகதுக்க போகங்களை யனுபவிக்கின்றன. அத்தனைச் செயல்களும் அவ்வத்தத்துவங்களின் இயல்பாயுள்ள அறிவெனத் தோன்றலாம். அஃதில்லை. உயிர் அக்கருவிகளிற் பொருந்தி அங்ஙனமெல்லாம் அறிகிறது. அக்கருவிகள் அல்லது அத்தத்துவங்கள் தம்மளவில் சடமே. குருபரனுபதேசத்தால் அத்தத்துவங்களெல்லாம் மாயை, அசேதனம் எனக் காண்பது **தத்துவ தரிசனம்**.

III. தத்துவங்கள் ஏகதேச வியாபகமுடையன. முதல்வன் சர்வவியாபி. அதனால் உயிர் அவற்றைக் கொண்டு அவனையறிய முடியாது. முடியுமென்பது நாழியென்னும் அளவையில் நாலு நாழிநீரை முகந்து விடலாம் என்பது போலும். ஆகையால் முதல்வனை யறியும் முயற்சியில் உயிருக்குத் தத்துவங்கள் சிறிதுந் துணைபுரிய மாட்டா என்பது சித்தம். குருபரனுப தேசத்தால் அவற்றின் எளிமையை அங்ஙனமாமென் றுணர்வது தத்துவசுத்தி.

ஆன்மரூபம்-தரிசனம்-சுத்தி

2. பாயிரு ணீங்கி ஞானந்
தனைக் காண்ட லான்ம ரூபம்
நீயுநின் செயலொன் றின்றி
நிற்றலே தரிச னந்தான்
போயிவன் றன்மை கெட்டுப்
பொருளிற்போ யங்குத் தோன்றா
தாயிடி லான்ம சுத்தி
யருணூலின் விதித்த வாறே.

பதவுரை

பாய் இருள் நீங்கி	-	பரந்த தத்துவங்களின் (உருவதரிசன சுத்திகளுக்குப்) பின்னர்
ஞானந்தனைக் காண்டல்	-	(ஆன்மா) தன்னியல்பையறிதல்
ஆன்மரூபம்	-	ஆன்மரூபம் (எனப்படும்).
நீயும்	-	ஆன்மாவும்

நின்செயல்	- தான் செய்யக் கடவதொரு முயற்சி
ஒன்று இன்றி	- வேறில்லாமல்
நிற்றல்	- (சிவமே தாரகமாய்) நிற்றல்
தரிசனந்தான்	- ஆன்ம தரிசனம் (எனப்படும்).
போய இவன் தன்மை	- (அங்ஙனம் சிவந்தாரகமாகச்) சென்ற ஆன்மாவினது பசுஞானம்
கெட்டு	- மடங்கி
பொருளில் போய்	- சிவஞானத்தின் வசமாய் நின்று
அங்கு	- அந்நிலையில்
தோன்றாதாயிடில்	- (முன்னர்ப்பயிற்சி வயத்தாலுள்ள அஞ்ஞானம் மீளவும் அதன்மாட்டுப்) பிரவேசியாதிருந்தால்
ஆன்மசுத்தி	- ஆன்மசுத்தி (எனப்படும்).
(இவ்வுண்மை)	
அருள்நூலில்	- வேதசிவாகமங்களில்
விதித்தவாறே	- சொல்லப்பட்ட விதம் (ஆகும்).

போய இவன் என்பது போயிவன் எனப் பெயரெச்சத்து அகரங்கெட நின்றது.

கருத்துரை

ஆன்மாத் தன்னியல்பை யறிதல் ஆன்ம ரூபம்.

ஆன்மாவின் இயல்பாவன :-

(a) கண் இருளோடு சேர்ந்து இருளையும், ஒளியோடு சேர்ந்து ஒளியையும் அறிவதுபோல ஆன்மா அசத்தோடு சேர்ந்து அசத்தையும் சத்தோடு சேர்ந்து சத்தையும் அறிவது;

(b) ஆகாயத்தின் தன்மையாகிய ஓசையானது பறை முதலியவற்றில் கடிப்பு முதலியன கொண்டு அடித்தால் மட்டும் வெளிப்படவதுபோல ஆன்மா முதல்வன் அறிவித்தால்மட்டும் அறிவது;

(c) படிகம் தான் சார்ந்த நிறத்தையே தன்னிறமாகக் கொள்வது போல ஆன்மா அசத்தைச் சார்ந்து அசத்தையும் சத்தைச்சார்ந்து சத்தையும் அனுபவிப்பது என்பனவே.

ஆன்மா இத்தனையையும் அறிவதால் வீட்டுக்குரிய சாதனத்தில் நின்று வீட்டைப்பெறும் அதிகாரம் தனக்கேயுண்டென்றும் அறியும்.

ஆன்மாத் தான் இதுவரை அசத்தினால் அறிந்து, அசத்தினை அறிந்து, அசத்தினை அநுபவித்து வந்த உண்மையையும், இனிமேல் சத்தினால் அறிந்து சத்தினை அறிந்து சத்தினை அனுபவித்துவரும் உண்மையையும் அறிவது ஆன்மதரிசனம்.

சற்குரவனால் ஆன்மாத் தன்னை இந்திரியங்களின் வேறாக உணரும். அவ்வுணர்ச்சி யொன்றே காரணமாக அது தனக்காதாரமாகிய சிவத்தின் திருவடியினைத் தலைப்படும். கயிறு அறுந்ததும் ஊசலிலிருந் தாடுவோன் தான் ஒரு முயற்சியுஞ் செய்யாமல்

தரையில் விழுந்து அத்தரையையே தனக்காதாரமாகக் கொள்வதுபோல.

ஆன்மா அசத்தாயுள்ள பாசத்தை அசத்தென்று கண்டு ஒருவுதலும், அப்படி ஒருவியவழித் தன்னிடத் துளதாகிய சிவஞானக் கண்ணினாலே சிவனை ஆராய்ந்தறிதலும், தொன்றுதொட்டுள்ள பழக்கத்தால் மலவாசனை இந்நிலையிலும் வந்து தாக்குத லுண்டாகையால் அவ்வாசனையை நீக்குவதற்குப் பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரித்தலும் ஆன்மசுத்தி.

அசத்தென்று கண்டு ஒருவுதலாவது பிரபஞ்சம் காரணரூபத்தில் வெறும்பொய்யென நினைந்திருத்தல்.

ஒருவுதலும் அறிதலும் சிவஞானம் ஆன்மாவின் மாட்டுப்பிரகாசித்தற்கு சாதனம். உச்சரித்தல் மலவாசனை நீங்குதற்குச் சாதனம்.

விளக்கவுரை

தத்துவங்கள் அம்மூவகையாக அறியப் பட்டொழியும். பின்னர் உயிர் தன்னியல்பை யறிய வேண்டும். உயிரினியல்புகள் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உவமானங்காட்டி விளக்கப்படும்.

I. முதலாவது, உயிர் கண்போல்வது என்பது எப்படி? கண் ஒளியுடையது, ஒளியாவது பார்க்குஞ் சக்தி. ஆயினும் விளக்கொளியின் சகாயம் இருந்தாற்றன் கண்ணாற் பார்க்கமுடியும் . எங்கும் இருளிருந்தால் கண்பார்க்க

மாட்டாது. அதுகொண்டு கண் குருடென்பது தப்பு. விளக்கொளியிற் கலந்தாற் பார்க்க வல்லதாதலும். இருளிற் கலந்தால் பார்க்க முடியாதாதலும் கண்ணொளிக்கியல் பென்பது அறியப்படும். குருட்டுக் கண்ணோ விளக்கொளியிலும் பார்த்தல் இல்லை. அதுபோல் உயிர் அறிவுடையது, அவ்வறிவு 1. கண் இருளோடு சேர்ந்திருப்பது : அசத்தாகிய தத்துவங்களோடு சேர்ந்திருப்பது போலாம். அவ்வறிவு அந்நிலையில் முதல்வனை யறியமாட்டாது. அவ்வறிவு 2. கண் விளக்கொளியோடு சேர்ந்திருப்பது : சத்தாகிய முதல்வனருளிற் சேர்ந்திருப்பது போலாம். அவ்வறிவு அந்நிலையிற்றான் முதல்வனை யறியும். உயிருக்கு அறிவே யில்லையெனில் அது குருட்டுக் கண் போல்வதாகும், அப்போது உயிருக்குச் சரியையாதி சாதனங்கள் வேண்டா, அவற்றை விதிக்கும் வேதாகமங்களும் வேண்டாதன என்பதாய் முடியும். ஆகவே உயிர் அசத்தோடு சேர்ந்து அசத்தை யறிவது போலச் சத்தோடு சேர்ந்து சத்தையறியு மியல்பினது.

II. இரண்டாவது, உயிர் ஆகாயம் போல்வது என்பது எப்படி? ஆகர்யத்தின் குணம் ஒலி. ஆகாயம் எப்போது மிருப்பது போல் அவ்வொலி எப்போதும் புலப்பட்டுக் கொண்டிருப்பதில்லை. பறையைக்கோல் கொண்டு அடிக்க ஒலி புலப்படும். அவ்வொலி பறையினுடையதன்று; கோலினுடையதுமன்று, ஆகாயத்தினுடையதே. பறை, கோல்களால் அவ்வொலி புலப்படுத்தப்படுகிறது. அதுபோல் உயிர்க்குணம் அறிவு. அதுதானாக அறியாது. முதல்வன் அறிவிக்க வேண்டும். அப்படியானல் அவ்வறிவு விளங்கும்.

III. மூன்றாவது, உயிர் படிகம்போல்வது என்பது எப்படி? படிகமும் தனக்கென ஒருகுணமுடையது. ஆயினும் அது எந்த நிறத்தைச் சார்கிறதோ அந்த நிறத்தையே தன்நிறம் போற் காட்டுவதுண்டு. பச்சைக் கண்ணாடியை அணிந்தவனுக்கு அக்கண்ணாடி தான் பச்சையாயிருப்பதால் பொருள்களைப் பச்சை நிறமுடையனவாகக் காட்டும். அதுபோலுமென்க. உயிரும் அசத்தாகிய தத்துவங்களைச் சார்கிறது. அதனால் அதனறிவும் அசத்துத் தன்மையைத் தன்னதாக்கி அசத்தாகிய பிரபஞ்சத்தையே காண்கிறது. அவ்வுயிர் சத்தாகிய முதல்வனருளைச் சார்வதாயின் அதனறிவும் அவ்வருளின் சத்துத்தன்மையைத் தன்னதாக்கிச் சத்தாகிய முதல்வனையே காணும்.

IV. இம்மூன்றியல்புகளையுடையது உயிர். குருபரனுப தேசத்தால் அவற்றையறிவது ஆன்மரூபம்.

அங்ஙனம் அறிந்த உயிரே முதல்வனைச் சாதனங்களில் நிற்பதன் மூலம் எய்தும் உரிமை தனக்குண்டெனவும் அறியும்.

V. உயிர் சகலத்தில் அசத்தாகிய தத்துவங்களின் சகாயத்தால் அசத்தாகிய பிரபஞ்சத்தையறிந்து அசத்தாகிய பிரபஞ்சபோகங்களை யனுபவித்துவந்தது; சுத்தத்தில் சத்தாகிய அருளின் சகாயத்தால் சத்தாகிய முதல்வனை யறிந்து சத்தாகியசிவபோகத்தையனுபவித்துவரும். அவ்வுண்மையைக் குருபரனுபதேசத்தால் அறிவது ஆன்மதரிசனம்.

VI. ஊசலிலிருந்து ஆடுகிறான் ஒருவன். கயிறு அறுந்து விடுகிறது. அவன் கதி என்ன? கீழே

விழுகிறான். விழுவதற்கென வேறுமுயற்சி செய்கிறானா அவன்? இல்லை. கயிறு அறுவதே போதும், அவனுக்கு அப்போது தாய் போலுதவுவது தரையே. தரைதான் அவனுக்குத் தாரகம். அதுபோல் இந்திரிய (தத்துவ)ங்களைப் பற்றிக் கிடக்கிறது உயிர். பின்னர் அது தன்னை அவ்விந்திரியங்களுக்கு வேறெனக் காண்கிறது. வேறாகக் காண்டலாவது இந்திரிய வயமாகிக் கிடந்த தன் பழைய நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தல். அதாவது பிரபஞ்சப்பற்று அறுதல் என்பது. அக்காட்சி கைவந்ததும் அதுவே ஏதுவாக அவ்வுயிர் முதல்வன் திருவடியிற் போய்விழுகிறது. விழுதற்கென வேறு முயற்சிவேண்டாம். அக்காட்சியே போதும். அத்திருவடி அவ்வுயிருக்குத் தாய் போலுந் தாரகமாயிருந்து அதனை ஏன்று ஆட்கொள்கிறது. இந்திரிய ஞானம் ஏகதேச வியாபகத் தன்மையுடையது. அதுபோனால் அவ்வுயிருக்குத் தன்னியல்பாகிய வியாபக ஞானம் விளங்கும், அந்த ஞானத்துக்கு அக்கருவிகளால் பயனொன்றுமில்லை. அந்த ஞானத்துள் ஒளிர்பவன் முதல்வன். அவனருளைக் கொண்டு அவனை அவ்வுயிர் ஆராயும். ஆனால் மலவாசனை அந்நிலையிலும் வந்து அவ்வுயிரைத் தாக்கினாலும் தாக்கலாம். அத்தாக்குதல் பொல்லாது, அதையுந் தடுத்திடல் வேண்டும். பஞ்சாக்கரத் தியானம் அத்தடை செய்தற்கேற்ற படைக்கலம். அம்மந்திரத்தை விதிப்படி கணித்தல் அவசியம். குருபர னுபதேசத்தால் அவை கைவரப் பெறுத்ல் ஆன்மசுத்தி.

அசத்தை அசத்தெனக் கண்டு அதிலிருந்து நீங்குதலும், சிவனருளைக் கொண்டு சிவனைத்

தன்னறிவிலே அறிதலும், சிவஞானம் அவ்வுயிரின் அறிவிலே விளங்கித்தோன்றுவதற்குச் சாதனம். பஞ்சாக்கரத் தியானம் மலவாசனையின் நீக்கத்திற்குச் சாதனம்.

சிவரூபம்

3. எவ்வடி வுகளுந் தானா
யெழிற்பரை வடிவ தாகிக்
கவ்விய மலத்தான் மாவைக்
கருதியே யொடுக்கி யாக்கிப்
பவ்வம்விண் டகலப் பண்ணிப்
பாரிப்பா னொருவ னென்று
செவ்வையே யுயிரிற் காண்டல்
சிவரூப மாகு மன்றே.

பதவுரை

கவ்விய மலத் (து)	-	பந்தித்திருக்கும் ஆணவமலத்திற் கட்டுண்டிருக்கும்
ஆன்மாவை	-	ஆன்மாக்களை
கருதியே	-	உத்தேசித்து
ஆக்கி ஒடுக்கி	-	(தனு கரண புவன போகங்களைப்) படைத்து (க்காத்து) அழித்து
எவ் வடிவுகளும்	-	(கலப்பினால்) எல்லாப் பிரபஞ்சங்களையும்
தான் ஆய்	-	சிவமாயுள்ள தானே என்னும்படி நின்று

எழில் பரை	-	அழகிய திருவருளை
வடிவது	-	(தனக்குத்) திருமேனியாக
ஆகி	-	கொண்டு (வெளிப்பட்டு)
பவ்வம்	-	(பொதுவியல்பைச் செய்யும்) உவர்த் தன்மையையுடைய இந்திரியங்களை
விண்டு அகலப் புண்ணி	-	வேறாக நீங்கிக்காணும்படி செய்து
பாரிப்பான்	-	ஆதாரமாக நிற்கின்றவன்
ஒருவன் என்று	-	ஒப்பற்ற குருமூர்த்தி யென்று
செவ்வையே	-	பிரதிக்கினை, ஏது, திருட்டாந்தங்களினால்
உயிரில் காண்டல்	-	(ஆன்மாத்) தன்னிறிவிலே பார்த்தல்
சிவரூபம் ஆகும்	-	சிவரூபம் எனப்படும்.

அன்று, ஏ அசைகள்

கருத்துரை

இரும்பைக் காந்தமும், கயிறு அறுந்த ஊசலிலிருந்தவனைத் தரையும் விகாரமின்றி நின்று இழுக்கும். அங்ஙனமே ஆன்மா இந்திரியங்களைத் தனக்கு வேறாகக்காணவே, முதல்வன் அதனைத் தன்வழிப்படுத்து நிற்பன். இதனை ஆன்மா அறிவது சிவரூபம்.

இச்சிவரூபமே ஆன்ம தரிசனத்தைப் பயக்கும்.

விளக்கவுரை

VII. உயிர் தன்னை இந்திரியங்களின் வேறாகக் கண்டதும் அவ்வுயிரை முதல்வனே தாரகமாய் நின்று தன்வசமாக்கி உபகரிப்பான் என்பது மேலே சொல்லப்பட்டது. குருபரனுபதேசத்தால் அவ்வுபகாரத்தை அறிவது சிவரூபம்.

இச்சிவரூபமும் மேலேயுள்ள ஆன்மதரிசனமும் ஏககாலத்தில் நிகழ்வன.

சிவதரிசனம்

4. பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த்
தோன்றலது முகமா
முரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ்
வுண்மையினை மிகத் தெளிந்து
பொருள்வேறொன் றின்றித்
தரைமுதலிற் போகாது நிலையினி
னில்லாது தற்பரையி னின்றழுந்தா
தற்புதமே யாகித்
தெரிவரிய பரமாநந் தத்திற் சேர்தல்
சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே.

பதவுரை

பரை - சிவசத்தி

உயிரில் - ஆன்மாவினிடத்தில்

யான் எனது என்று	-	சுட்டறிவு என்பது
அற	-	நீங்கும்படி
நின்றது	-	நிலைபெற்றது
அடி ஆம்	-	(சிவனது) பாதமாகும்,
பார்ப்பிடம் எங்கும்	-	பார்க்கின்ற எவ்விடமும்
சிவமாய்தோன்றலது	-	சிவமே விளங்கும்படி நிட்டை கூடல்
முகம் ஆம்	-	(சிவனது) முகமாகும்
உரை இறந்த சுகமதுவே	-	(அப்பொழுது அறிவுக் கறிவாகத் தன்மாட்டுத் தோன்றுகின்ற முதல்வனது) சொல்லுக்கடங்காத விளக்கமே.
முடி ஆகும்	-	(சிவனது முடியாகும்.)
என்று	-	என்றிவ்விதமாக
இவ்வுண்மையினை	-	சிவனுக்கடிமையாம் உண்மையை
மிகத் தெளிந்து	-	அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்துக் கண்டு
பொருள்	-	தனது சுதந்திரம்
வேறு ஒன்று இன்றி	-	தனித்து நிகழ்வது நீங்கி
தரை முதலில்	-	பிருதிவி முதலிய தத்துவங்களோடு கூடுதலாகிய சகலாவத்தையில்
போகாது	-	பொருந்தாமலும்

நிலையினில்	-	கேவலாவத்தையில்
நில்லாது	-	பொருந்தாமலும்
தற்பரையில்	-	தனது சுகத்தில்
நின்று அழுந்தாது	-	மயங்கி 'அகம் பிரமம்' என்று செருக்காமலும்
அற்புதமே ஆகி	-	சிவத்தின் வண்ணமாகி
தெரிவரிய	-	அறிதற் கருமையாகிய
பரமாநந்தத்தில்	-	மேலான ஆநந்த சொரூபனாகிய சிவனுக்கு
சேர்தல்	-	அடிமையாதலே
உண்மை	-	உண்மையான
சிவன் தரிசனம் ஆ	-	சிவ தரிசனமென்று
நூல் செப்பும்	-	ஞான நூல்கள் சொல்லும்.

கருத்துரை

மலவாசனை நீக்கத்திற்குச் சாதனமாகப் பஞ்சாக்கரத்தை 'விதிப்படி' உச்சரிக்க என்றார். இது ஓது முறை. இனி அங்ஙனம் ஓதும்போது ஞாதிரு, ஞான, ஞேயப் பகுப்பிறந்து நின்று ஓத வேண்டும். இன்றேல் மலவாசனை நீங்காது. அங்ஙனம் பகுப்பிறக்க வேண்டுமேயானால் முதல்வனோடு ஏகனாகி நிற்கவும் வேண்டும். இது நிற்குமுறை. இங்ஙனம் ஓதுமுறையும் நிற்குமுறையுந் தம்முள் இயைபுடையன வென்பது கண்டுகொள்க.

பெத்தத்தில் ஆன்மாத் தன்னோடு உடனாய் நிற்கும் முதல்வனைத் தனக்கு வேறாகக் காண மாட்டாமல் 'அவனே தான்' என்று கருதுமாறு

அம்முதல்வன் அவ்வான்மாவோடு ஒன்றுபட்டு அதன்வழியிலேயே நிற்கிறான். அதே விதமாக இங்கு முதல்வனோடு உடனாய் நின்று அறிகின்ற ஆன்மாத்தன்னை அம்முதல்வனுக்கு வேறாகக் காணாமல் 'தானே அவன்' என்னும்படி அம்முதல்வ னோடு ஒன்று பட்டு அவன் வழியில் நிற்றல் வேண்டும். இதுவே முதல்வனோடு ஏகனாகி நிற்றலாம். இதுவே சிவதரிசனம்.

இச்சிவதரிசனமே ஆன்மசுத்தியைப் பயக்கும்.

நெருப்பு இரும்பைத் தன்வண்ணமாக்கி அதன் கறையைக் கெடுக்கும். அதபோல முதல்வன் அங்ஙனம் ஏகனாகி அடிமைப்பட்டு நின்ற ஆன்மாவைத் தன்வண்ண மாக்கி மலத்தைக் கெடுப்பன்.

மலவாசனை யென்றது ஆணவமலத்தின் வாசனை. ஞேயம் காட்சிப்பட்டவிடத்தும் பயிற்சி வயத்தான் ஆன்மா முன்னர்த் தான் நோக்கிய பாசத்தையே நோக்கி நிற்கும். அந்நோக்கமே மலவாசனை. இவ்வாசனையே ஞாதாவும் ஞானமும் ஞேயமுமெனப் பகுத்துக் காணும் மயக்கவுணர்விற்கு ஏது. ஆகவே முதல்வனோடு ஏகனாகி நின்றால் இம்மலவாசனை நீங்கும்.

விளக்கவுரை

இங்கு மலவாசனை என்பது, ஆணவ மலவாசனை. அது நீங்க வேண்டும். அதற்காகப் பஞ்சாக்கரத்தை உச்சரித்தல் அவசியம். விதிப்படி என்பதற்குக் குருபரன் செய்த உபதேசக்கிரமத்தில்

என்பது கருத்து. அப்படிக் கணிப்பதே அம்மந்திரத்தை ஓதுமுறை. அவ்வோது முறையில் ஓதும்போது ஓதுபவன் எப்படி நிற்க வேண்டும்? ஞாதுரு, ஞானம், ஞேயங்கள் திரிபுடி எனப்படும். ஞாதுரு – காண்பான். ஞானம் – காட்சி. ஞேயம் – காணப்படும் பொருள். ஓதும்போது அம் மூன்றையும் பகுத்துக் காண்டல் கூடாது. கண்டால்அது மயக்கவுணர்வாகும். அப்பகுப்பைக் கடந்து நிற்றல் வேண்டும். அதுவே நிற்குமுறை. முதல்வனோடு ஏகனாகி நின்றால் தான் அது கூடிவரும். அம்மந்திரத்தை அங்ஙனம் நிற்கு முறையில் நின்று ஓது முறையில் ஓதவேண்டும்.

முதல்வனது அடி, முகம், முடி எல்லாம் அவனருளே. அவ்வருள் உயிரின் சுட்டறிவைக் கெடுக்கும் போது அவனது திருவடி எனவும், எங்குமாய்க் காணப்படும் நிட்டையில் அவனது திருமுகம்எனவும், அறிவுக்கறிவாயிருக்கும் நிலையில் அபாரமாய் விளங்கும் போது அவனது திருமுடி எனவும் போற்றி வணங்கப்படும். தான் அவ்வருட்கிடையில் எல்லாப் பெருங் கேட்டுக்கும் மூலகாரணமாய தற்சுதந்திரம் தனக்கில்லை, எந்நிலையிலும் முதல்வனது வசத்ததே யென்பதை அவ்வுயிர் அறியும். அதனால் சகலாவத்தை, கேவலாவத்தைகளில் அவ்வுயிர் திரும்பாது. உயிர் தத்துவங்களில் சார்ந்து கிடந்ததற்கும் சிவத்திற் சார்வதற்கும் இடைப் பட்டதொரு நிலையை யெய்தியதும் பிரபஞ்ச சுகத்தினும் மேலானதொரு சுகத்தைக் கண்டு அதுவே உயர்நிலை யெனக் கருதிச் செருக்கும். ‘அஹம்ப்ரஹ்மம்’ என்னும் ஞானம் அதுதான்.

அருளில் நின்ற உயிர் அச்செருக்கிலும் அகப்பட்டுக் கொள்ளாது. பின்னர் அது சிவத்தைச் சார்ந்து சிவத்தின் வண்ணமாகிச் சிவனுக்கு மீளா அடிமையாகும்.

VIII. பெத்தத்தில் உயிரோடு உடனாய் நிற்பான் முதல்வன். அவனை அவ்வுயிர் அறிய மாட்டாது. அதனால் அவனே தானாகிய அவ்வுயிர் என்று அவ்வுயிர் கருதும். அப்படிக் கருதும்படி அவன் அதனோடு ஒன்றி அதுபோமாறெல்லாம் போம்படி விட்டு அதன் வழியிலேயே நிற்பான். ஆனால் முத்தியில் உயிர் முதல்வனோடு உடனாய் நிற்கும். அப்படி நின்று அவ்வுயிர் அவனை அறியும். ஆனால் அது தன்னை அவனுக்கு வேறாகக்காணாது. தானாகிய அவ்வுயிரே அவன் என்னும்படி அது அவனோடு ஒன்றி நின்று அவன் செலுத்து மாறெல்லாம் செல்லும். மேலே மீளா அடிமையெனச் சொல்லப்பட்ட உயிர் அங்ஙனம் முதல்வனோடு ஒன்றி அவன் வயமாய் நிற்றலே ஏகனாகி நிற்றல் எனப்படும். குரபரனருளால் அப்படி நிற்பதே சிவதரிசனம்.

4. நெடுங்காலம் பிரபஞ்சத்திற் பயின்று கிடந்தது உயிர். குருபரனருளால் அஃதிப்போது மலம் நீங்கி முதல்வனைக் கண்டது. கண்டாலும் நெடுங்காலப் பழக்கங் காரணமாக பிரபஞ்ச நோக்கம் அதற்கு வருதல் கூடும். அந்நோக்கமே மலவாசனை. திரிபுடிக் காட்சியாகிய மயக்கத்திற்கு அவ்வாசனைதான் ஏது. முதல்வனோடு ஏகனாகி நிற்கின்ற வுயிரை அவ்வாசனையும் விட்டொழியும்.

சிவயோகம்

5. எப்பொருள்வந் துற்றிடினு மப்பொருளைப் பார்த்திங்
கெய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலா

மொப்பிலருள் கண்டுசிவத் துண்மை கண்டிங்
குற்றதெல்லா மதனாலே பற்றி நோக்கித்

தப்பின்னச்செய் வதுமதுவே நினைப்பு மதுதானே
தருமுணர்வு புசிப்புமது தானே யாகு

மெப்பொருளு மசைவில்லை யென வந்தப் பொருளோ
டிசைவதுவே சிவயோக மெனுமிறைவன் மொழியே.

பதவுரை

இங்கு	-	(முதல்வனோடுஏகனாகி நிற்கும் ஆன்மா) அப்படி நிற்கும்போது
எப்பொருள்வந்து உற்றிடினும்	-	எவ்வகைப் பிரபஞ்சங்கள் வந்து தாக்கினாலும்
அப்பொருளைப் பார்த்து	-	அவற்றின் இயல்பை உள்ளவாறுணர்ந்து (அவற்றையும்)
அங்கு எய்தும்	-	அவற்றின் வசமாய் நிற்கின்ற
உயிர்தனைக்கண்டு	-	ஆன்மாக்களின் இயல்பை உள்ளவாறுணர்ந்து (அப்ப்ரதந்திரியத்தையும் நீக்கி)
அவ்வுயிர்க்குமேல் ஆம்	-	தன்னை வியாபித்து விளங்குகின்ற

ஒப்பு இல் அருள் கண்டு	-	ஒப்பற்ற திருவருளில் (தான்) வியாப்பியமா யடங்கி
சிவத்து உண்மைகண்டு	-	சிவத்தினையே யுணர்ந்து
இங்கு உற்றது எல்லாம்	-	இங்குத் தாக்குகின்ற மாயா கன்மங்களையெல்லாம்
அதனாலே பற்றி நோக்கி	-	அவ்வுணர்வைப் பிடித்துக் கொண்டு நீக்கி
தப்பினைச் செய்வதும்	-	(பிறர்தனக்கு) அகிதத்தையும் (இதத்தையும்) செய்வதை
அதுவே	-	முதல்வனே (செய்கின்றானெனவும்)
நினைப்பும்	-	(தான் பிறர்க்குச் செய்யும்) இதம் அகிதங்களை
அதுதானே	-	அம்முதல்வனே (செய்கின்றானெனவும் உணர்ந்தால்)
தரும் உணர்வு	-	(அந்த ஆன்மா) ஆர்ச்சிக்கின்ற இதமகிதங்களையும்
புசிப்பும்	-	(நுகரும்) இத மகிதங்களையும்
அது தானே அகும்	-	(தனது ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியுமாக ஏன்று கொள்பவன்) அம் முதல்வனே யாவான்

(ஆகையால் அந்த ஆன்மா)

எப்பொருளும்	-	எவ்வகைப் பொருள்களும்

அசைவு இல்லை என	-	(சிவனையின்றித்) தொழிற்படாவென்று
அந்தப் பொருளோடு	-	அம்முதல்வனோடு கூடி
இசைவதுவே	-	அவன் பணியில் நிற்றலையே
இறைவன் மொழி	-	வேதசிவாகமங்கள்
சிவயோகம் எனும்	-	சிவயோகம் என்று சொல்லும்.

கருத்துரை

பிரபஞ்சங்களின் இயல்பை யுணர்தலானது அவையெல்லாம் முதல்வனால் தொழிற்படுவனவன்றித் தாமாகத் தொழிற்படுவன் வல்லவென்பதைத் தெளிவாகத் தெரிதல்.

ஆன்மாக்களின் இயல்பை யுணர்தலாவது அவற்றின் இச்சா ஞானக் கிரியைகளெல்லாம் முதல் வனது இச்சா ஞானக்கிரியைகளால் தொழிற்படுவன வன்றித் தாமாகத் தொழிற்படுவன வல்லவென்பதைத் தெளிவாகத் தெரிதல்.

முதல்வனோடு ஏகனாகி நின்ற ஆன்மா அவ்விறைபணியில் வழுவாது நிற்றல் சிவயோகம்.

இறைபணியில் நிற்றலாவது அந்த ஆன்மா 'நீயே யெனக்குள் நின்று செய்கின்றாயாகலின் என்னாற் செய்யப்படும் இதமகிதமெல்லாம் நீ செய்யுஞ் செயலே' என்றும், 'நீயே பிறரைக் கொண்டு செய்வித்துஞ் செய்கின்றாயாகலிற் பிறரால் எனக்கு வரும் இதமகிதங்களும் நீ செய்யுஞ் செயலே - பிறிதில்லை' என்றும் அவனருளையல்லது ஒன்றையுங் கருதாமல் தன்னை யிழந்துநிற்கப் பெறுவதே.

இவ்வாறு நிற்றற்குப் பயன் மாயை நீக்கமுங் கன்மநீக்கமுமாம். இங்கு மாயையென்றது அதன் காரியமாகிய மயக்க வாசனையும், கன்மமென்றது ஆகாமிய வாசனயுமே.

ஆகவே முதல்வனோடு ஏகனாகி நிற்றலாகிய சிவதரிசனத்தாலும், அவ்விறைவனது பணி நிற்றலாகிய சிவயோகத்தாலும் வரும் பயன் மும்மல நீக்கிமாகிய பாசவீடேயாம். உப்பு தன்சுவையை நீர்க்காக்குவது போல் இங்கு முதல்வன் தன்னைச் சேர்ந்த உயிரின்கண் தனது எண்குணங்களையும் பதிப்பித்து அதனைத் தன்னோடொப்பச் செய்து நிற்பன்.

விளக்கவுரை

IX. முதல்வனோடு ஏகனாகி நிற்கும் ஆன்மா. அப்போது பிரபஞ்ச விஷயம் வந்து அதனைத்தாக்கலாம். தாக்கினால் அதனியல்பை உள்ளவாறு அவ்வுயிர் உணர்ந்து அதனை விட்டு விலகும். உள்ளவாறுணர்தலாவது பிரபஞ்ச முழுக்கத் தானாக இயங்குவதன்று என்பதை உணர்தல். உயிர்களினியல்பையும் அவ்வுயிர் உணரும். அவ்வியல் பாவதென்னை? அனைத்துயிர்களும் பிரபஞ்ச வசமாய் நிற்பன. அவ்வுயிர் அப்பரதந்திரத்தைவிட்டு விலகித் தன்னை வியாபித்து விளங்குகின்ற திருவருளில் வியாப்பியமாயடங்கிமுதல்வனை உணர்ந்து நிற்கும். அவ்வுயிரை மாயை கன்மங்கள் வந்து தாக்கினால், அவ்வுணர்வைப்பற்றி நின்று அவற்றை நீக்கிக் கொள்ளும். அங்ஙனம் ஏகனாகி நின்ற அவ்வுயிர் அவ்விறைபணியிலும் நிற்றல் அறியப்படும். இறைபணியில் நிற்றலென்பது என்னை? “எனக்கெனச் செயலொன்றுமில்லை. யான் செய்வனவெல்லாம் நீ செய்யும் செயல்களேயாம். எனக்குப் பிறர் செய்யும் நலந்

தீங்குகளெல்லாம் அவர் செய்வனவல்ல, அவரைக்கொண்டு நீ செய்யும் செயல்களேயாம் அவையனைத்தும்' என்ற உண்மையை அவ்வுயிர் கண்டு தன்னை யிழந்து அம்முதல்வனின் அருள் வழியில் நிற்றலே இறைபணி நிற்றலாம். குருபரன் அருளால் அந்நிலை கைவருவதே சிவயோகம்.

அப்படி நிற்பதால் அவ்வுயிரைப் பற்றிய மாயாகாரியமாகிய மயக்க வாசனையும் ஆகாமிய வாசனையும் நீங்கும். உயிர் சிவதரிசனத்தாலும் சிவயோகத்தாலும் பாசமுழுவதும் விட்டொழியப் பெற்றுச் சிவத்தினைச்சாரும். சிவம் அவ்வுயிரின் கண் தனது எட்டுக்குணங்களையும் பதியச்செய்து தன்னோடொப்பவைத்து ஆளும்.

சிவபோகம்

6. பாதகங்கள் செய்திடினுங் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினு நெறியல்லா நெறிபயிற்றி வரினுஞ்
சாதிநெறி தப்பிடினுந் தவறுகள் வந்திடினுந்
தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கி(ல்)
நாதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து
நானாபோ கங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்
பெருகுசிவ போகமெனப் பேசுநெறி யிதுவே.

பதவுரை

தான்	- இறைபணி நின்ற ஆன்மா
தனக்கு என ஓர்	- அவனருளாலல்லது

செயல் அற்று	-	ஒன்றையுஞ் செய்யானாகி
அது ஆய் நிற்கில்	-	சுத்தாத்துவித சம்பந்தத்தால் முதல்வன் திருவடிகளில் ஏகமாகி நின்று கொண்டால்
பாதகங்கள் செய்திடினும்	-	பாவங்களைச் செய்தாலும்
கொலை களவு கள்ளு பயின்றிடினும்	-	கொலை களவு கட்குடி யிவற்றில் நின்றாலும்
நெறி அல்லா	-	நல்லொழுக்கமல்லாத
நெறி பயிற்றிவரினும்	-	தீயொழுக்கங்களைச் செய்து வந்தாலும்
சாதிநெறி தப்பிடினும்	-	சாதியாசாரங்களில் தவறினாலும்
தவறுகள் வந்திடினும்	-	(இன்னும் பல) குற்றங்களைச் செய்தாலும்

(அவ்வான்மாவின் உடம்பில் நிகழும் பிராரத்த முழுவதையும்)

அவன் உடல் (ஆய்)	-	அவ்வான்மாவே உடலாக
நாதன் உயிர் ஆய்	-	முதல்வன் (அவ்வுடலின்)உயிராக நின்று
உண்டு உறங்கி நடந்து	-	ஏன்று கொண்டு

நானா போகங்களையும்	-	பிராரத்தவினைக்கீடாக வரும் எல்லா விடயங்களையும்
தான் ஆகச் செய்து	-	சிவபோக மாக்கி
பேதம் அற நின்று	-	தன் திருவடி அவ்வான் மாவை விட்டுக் கவர்த்தலின்றி
இவனை	-	அவ்வான்மாவை
தான் ஆக்கி விடுவன்	-	அதன் இயல்புசிறிதுந் தோன்றாது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கி யாண்டு வருவன்
இதுவே	-	இவ்வுண்மையே
பெருகு சிவபோகம்	-	மேலான சிவபோகம்
எனப் பேசு நெறி	-	என்று சொல்லப்படும் உயர் நிலையாம்.

கருத்துரை

முதல்வன் ஆன்மாவுக்கு அறிவிச்சை செயல்களை விளக்குதல் காட்டுமுபகாரம். விளக்கொளி கலந்த கண், விளக்கொளி கலந்த பொருளையே பார்க்கும். அப்படி ஆன்மா ஒரு பொருளை யறிதற்கு முதல்வன் அவ்வான்மாவை யதிட்டித்து அப்பொருளினுங் கலத்தல் வேண்டும். அதாவது ஆன்மா ஒரு பொருளை யறியும்போது முதல்வனும் அவ்வான்மாவோடுடனின்று அறிதல் வேண்டும். முதல்வன் இவ்வாறறிதல் காணுமுபகாரம்.

இவ்விரண்டினும் காணு முபகாரமே அத்துவித நிலையைத் தெளிய விளக்கும்.

இறைபணி நிற்கும் ஆன்மா முதல்வனுக்கு உடலாகவும், முதல்வன் அதனை யதிட்டித்து நிற்கும் உயிராகவும், இருப்ப அவ்வான்மாவுக்கு இந்நிலையில் விடயமாவது அம்முதல்வனே. ஆனால் முதல்வனைக் காண்பது உடலென நிற்கும் அவ்வான்மாவா? அல்லது உயிரெனநிற்குந்தானேயா? எனின் ஆன்மா அறிந்த தென்றும் தான் அறிந்தானென்றும் பிரித்தறிய முடியாதவாறு இருவரது அறிவும் ஒன்றனையொன்று விடாமல் ஒருங்கே விடயித்துச் செல்லுமென்க. எனவே அந்த ஆன்மாவின் பொருட்டு முதல்வனும் தன்னைக்கண்டு உபகரித்துவரும் அத்துவித நிலையை அவ்வான்மா அருட்கண்கொண்டு பார்க்கும். இப்படியாக முதல்வனையே விடயிக்கும் அவ்வான்மாவினது பிராரத்த முழுவதையும் அவ்வான்மாவினிடமாக நின்று அம்முதல்வனே ஏன்று கொள்வன். ஆகையால் அவ்வான்மாவுக்குப் பிராரத்தவாதனையில்லை. இவ்வாறு மலங்களெல்லாம் நீங்கவே அவ்வான்மா முதல்வனது உபகாரத்தை அறிதலும் அதன்கண் இச்சை மீதூர்தலும் அதில் அழுந்துதலுஞ் செய்யும். இதுவே சிவபோகம். இதுவே சிவப்பேறு.

இரத குளிகை பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கி நிற்பது போல இறைவன் உயிரை அதன் இயல்பு சிறிதுந்தோன்றாது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கி நிற்பான்.

விளக்கவுரை

அவ்வுயிர் அவனருளாலல்லது எதனையுஞ் செய்யாது. முதல்வன் திருவடி நீழலில் நிற்பதொன்றே

அதன் செயல். அதன்பால் சிலபல விலக்குகள் காணப்பட்டால் அவை அதன் செயல் அல்ல. அதனைப் பிராரத்தவினைவந்து தாக்கலாம். அது அவ்வுயிரின் உடலோடு கழியும். அவ்வுயிரைத்தாக்காது. அவ்வுயிர் முதல்வனுக்கு உடலாய் விடும். முதல்வன் அதிலிருக்கும் உயிராவான். அவன் அதனைத்தன் வியாபகத்துள்டக்கி யாண்டு கொள்வான்.

X. அவன் அவ்வுயிரின் அறிவிச்சை செயல்களை விளக்குவது அதற்கு காட்டு முபகாரம். பொருள்களை அஃதறியும்போது அதனோடு அவனும் உடனின்று அறிதல் வேண்டும். அவ்வாறு அறிவது அவன் அதற்குச் செய்கிறகாணுமுபகாரம். முத்தியில் உயிர்க்கு விடயமாவான் முதல்வனே. அவ்வுயிர் அவனைக் காணும்போது அஃதறிகிறதென்றும் அவனறிகிறானென்றும் பிரித்துக் காணமுடியாது. அதனால் அவ்வுயரின் பிராரத்த முழுவதையும் முதல்வனே ஏன்று கொள்வான். ஆகையால் பிராரத்தவினையும் அதை விட்டகலும். இப்படி யெல்லாம் அவ்வுயிர்க்கு முதல்வன் செய்யும் உபகாரத்தைச் சாமானியமெனக் கருதிடலாமா? அவ்வுயிர் அவ்வுபகாரத்தினருமையை யறியும். அதனறிவு தொழிற்படுவது அப்படி. அவ்வுயிரின் இச்சை அவ்வுபகாரத்தில் பொங்கியெழும். அதனிச்சை தொழிற்படுவது அப்படி. அவ்வுயிரின் செயல் அவ்வுபகாரத்தில் அழுந்தி நிற்கும். அதன் செயல் தொழிற்படுவது அப்படி. அவ்வுயிரின் அறிவிச்சை செயல்கள் அவ்வாறாவதே சிவபோகம்.

உண்மைநெறி விளக்கப் பதவுரை, கருத்துரை
விளக்கவுரைகள் முற்றுப் பெற்றன.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

அருள்திரு மெய்கண்ட சிவம். அருள்திரு அருணந்தி சிவம். அருள்திரு மறை ஞானசம்பந்த சிவம். அருள்திரு உமாபதி சிவம்.

சந்தான குரவர்

ஸ்ரீ கோமதி ஸ்கிரீன்ஸ், செல் : 98424 40181